**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு மே திங்கள் 08-ம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் சித்திரை திங்கள் 25-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 189/2024**
**(CC 81/2015-லிருந்து Split up செய்யப்பட்ட வழக்கு)**
(குற்ற எண்.545/2014, தேவகோட்டை தாலுகா காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
தேவகோட்டை தாலுகா காவல்நிலையம்,
குற்ற எண்.545/2014.

….குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1. முத்து மாணிக்கம் (1 வது எதிரி) (28/2014)
த/பெ. தேவர் அம்பலம்

…..எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>தேவகோட்டை தாலுகா காவல்நிலையம்,<br>குற்ற எண்.545/2014. |
| 2. | எதிரிகள் | 1.முத்து மாணிக்கம் (1 வது எதிரி)<br>த/பெ. தேவர் அம்பலம் |

<table>
<tr><td></td><td></td><td colspan="3"><u>முகவரி:</u><br>கொட்டகுடி, திருப்பாக்கோட்டை, தேவகோட்டை தாலுகா.</td></tr>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுகள்</td><td colspan="3">1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 452, 323, 506(2) & S.4 of TNPHW Act-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>4.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="3">22/08/2014</td></tr>
<tr><td>5.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">22/08/2014</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td>இல்லை</td><td colspan="2" rowspan="2">முன்பிணை பெற்ற நாள்:<br>28/08/2014</td></tr>
<tr><td>பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>7.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">20/07/2015</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">02/02/2016</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">-----</td></tr>
<tr><td rowspan="3">10.</td><td rowspan="3">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>26/07/2016</td><td>26/07/2016,<br>27/09/2022</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>26/07/2016</td><td>26/07/2016,</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 17/11/2022 |
| | | அ.சா.3 | 26/07/2016 | 26/07/2016, 27/09/2022 |
| | | அ.சா.4 | 09/07/2019 | 09/07/2019 |
| | | அ.சா.5 | 09/07/2019 | 09/07/2019 |
| | | அ.சா.6 | 28/11/2019 | 28/11/2019 |
| | | அ.சா.7 | 23/08/2022 | 23/08/2022, 24/08/2022 |
| 11. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 18/11/2025 | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | ------ | ----- | |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 02/02/2016 | | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 18/11/2025 | | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 08/05/2026 | | |
| 16. | தீர்வு | **முடிவாக, 1 வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 452, 323, 506(2) & S.4 of TNPHW Act-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து 1 வது எதிரியை மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து** | | |

| | | |
|---|---|---|
| | | **குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.ராமு, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 22.8.2014ம் தேதி மாலை சுமார் 7.00 மணிக்கு வாதியின் மாடு எதிரிகளின் வயலில் இறங்கி மேய்ந்து பிரச்சினை ஏற்பட்டு இவர்களுக்குள் முன்பகை இருந்ததை மனதில் வைத்து 1 வது எதிரி வாதியிடம் சென்று உன்னோட வயலில் என்னோட மாடுகள் இறங்கியதற்கு பிரச்சினை செய்தாய் இன்றைக்கு ஏன்டி தேவுடியா முண்ட என்னோட வயலுக்குள்ள உன்னோட மாட்டை இறக்கிவிட்டாய் என்று தரக்குறைவாக பேசியபோது அதைக்கேட்ட வாதியை 1 வது எதிரி அடிக்கச் சென்ற போது அந்த சத்தம் கேட்ட 1 வது எதிரியின் உடன் பிறந்த சகோதரரான 2 வது எதிரி சம்பவ இடத்திற்கு வந்து இந்த தேவுடியா முண்டையை அடிடா என்று இருவரும் சேர்ந்து அடிக்கச் செல்லும் போது வாதி அவரது வீட்டிற்குள் சென்று ஒழிந்துள்ளதாகவும், ஆனால் 1 மற்றும் 2 வது எதிரிகள் வாதியை தாக்கும்

நோக்குடன் வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஏற்கனவே கையில் தயாராக கொண்டு வந்திருந்த கம்பால் 1 வது எதிரி வாதியின் இரண்டு கால்களிலும் அடித்து 2 வது எதிரி வாதியை தனது வைத்திருந்த கம்பால் தலையில் அடித்தும் காயப்படுத்தியுள்ளதாகவும், மேலும் எதிரிகள் இருவரும் வாதியை தலை முடியையும் கையையும் பிடித்து இழுத்து அவர்களது காலால் வாதியின் தொடையில் மிதித்துள்ளதாகவும், இதை சம்பவ இடச்சாட்சிகள் விலக்கிவிட்டுள்ளதாகவும், அப்போது எதிரிகள் தனது கையில் வைத்திருந்த கம்பைக்காட்டி என்னைக்கு இருந்தாலும் உன்னை அடித்துக்கொல்லாமல் விடமாட்டேன் என்று பெண் என்றும் பாராமல் மிரட்டி சென்ற குற்றத்திற்காக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 452, 294(பி), 323, 506(2) உ/இ பிரிவு 4 of TNPHW Act-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 452, 323, 506(2) & S.4 of TNPHW Act-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ 5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 லதாராணி தனது சாட்சியத்தில் கடந்த 22.08.2014-ம் தேதி இரவு 7.30 மணிக்கு தன் வீட்டில் வந்து எதிரிகள் இருவரும் ஏன் என்னை எதிர்த்து பேசுகிறாய் வயலில் ஏன் இறங்கினாய் தேவிடியா முண்டை என்று அசிங்கமாக பேசி கம்பால் தன்னை 1ம் எதிரி தன் தலையில் அடித்தார் என்றும் 2ம் எதிரி தலையில் அடித்து இரத்தகாயம் ஏற்பட்டது என்றும் எதிரிகள் இருவரும் இரண்டு காலிலும் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் தங்கள் ஊரை சேர்ந்த குமாரசாமி, நாகு ஆம்பளை இல்லாத வீட்டில் வந்து பிரச்சனை செய்கிறீர்கள் என்று எதிரிகளை கேட்டார்கள் என்றும் எதிரிகள் இருவரும் தன்னை பார்த்து என்னைக்கு இருந்தாலும் உன்னை அடித்து கொல்வதுதான் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள் என்றும் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன் என்றும் பின்னர் புகார் மனு அ.சா.ஆ.1-ஐ கொடுத்தேன் என்றும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 குமாரசாமி தனது சாட்சியத்தில் 22.08.2014-ம் தேதி இரவு 7.30 மணிக்கு அ.சா.1 வீட்டில் சத்தம்கேட்டது என்றும் தான் உடனே சென்று பார்த்தேன் என்றும் எதிரிகள் அசா.1 ஐ கம்பால் தலையில் அடித்து ரத்தகாயம் ஏற்படுத்தினார்கள் என்றும் தான் சென்று இருவரையும் விலக்கிவிட்டேன் என்றும் பக்கத்துவீட்டில் இருக்கும் மாரி என்பவரும் எதிரிகளை விலக்கி விட்டார்கள் என்றும் அதன்பின் அசா.1 ஐ அவரது மாமனார் ராமசாமி என்பவர் கா.நி. செல்வதாக கூறினார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3 வேலு தனது சாட்சியத்தில் 23.08.2014-ம் தேதி காலை 6.30 மணிக்கு தானும் தங்கள் ஊரைச்சேர்ந்த சாத்தையா மகன் சபரி என்பவரும் தன் வீட்டிற்கு பக்கத்தில் நின்று பேசிக்கொண்டு இருந்தபோது போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா. 5 சபரிநாதன் தனது சாட்சியத்தில் சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் முதல்நாள் பிரச்சனை நடந்த கிருஸ்ணன் கோவிலுக்கு அருகே போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து

தன்னுடையதுதான் என்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா. 6 முகமது ஹாரிஸ் மருத்துவர் தனது சாட்சியத்தில் கடந்த 22.08.2014-ம் தேதி தேவகோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது இரவு 8 மணிக்கு பழனியப்பன் என்பவரின் மனைவி லதா என்பவர் தன்னை இனம் தெரிந்த 2 ஆண் மற்றும் 3 பெண்கள் கட்டையால் தனது வீட்டிற்குள் வைத்து அன்று இரவு 7 மணியளவில் தாக்கியதாகவும் மேலும் அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவரை தான் பரிசோதனை செய்ததில் அவருக்கு முன்தலையில் சிதைந்த காயம், இடது முழங்கையில் வலியும், இரு தொடையிலும் வலியும், இடது முழங்கையில் ஒரு வீக்க காயம் இருந்தது என்று தான் காயச்சான்று அ.சா.ஆ.3-ஐ வழங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.6) அ.சா.7 செய்யது அலி தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடத்தை அ.சா.ஆ.5 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b) இன்

கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தனது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) அ.சா.ஆ.1 புகாரில் 22/08/2014 ம் தேதி மாலை சுமார் 7.30 மணியளவில் எதிரி முத்துமாணிக்கம் தனது வீட்டின் முன்பு வந்து அசிங்கமாக பேசியதாகவும், 1 ம் எதிரி முத்து மாணிக்கம் தன்னை அடிக்க வந்ததாகவும், அந்த சத்தம் கேட்டு 2 ம் எதிரி ராமு (எ) வேலாயுதமும் இந்த தேவிடியா முண்டைய அடிடா என்று சொல்லி கொண்டு வரவும் தான் வீட்டிற்குள் ஓடிப்போய் விட்டதாகவும் தன்னை பின்தொடர்ந்த முத்து மாணிக்கமும், ராமு (எ) வேலாயுதமும் தனது வீட்டிற்குள் வந்து ராமு (எ) வேலாயுதம் தன் தலையில் கம்பால் அடித்து காயப்படுத்தியதாகவும், 1 வது எதிரி முத்து மாணிக்கம் இரண்டு கால்களிலும் கம்பால் அடித்து காயப்படுத்தியதாகவும் இருவரும் தனது தலைமுடியையும் கையையும் பிடித்து இழுத்து காலால் தொடையில் மிதித்ததாகவும், இருவரும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(8.2) அ.சா.ஆ.1 புகாரில் வீட்டின் முன்பு வந்து தன்னை பார்த்து அசிங்கமாகப் பேசியதாக குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் அவ்வாறு வீட்டின் முன்பு எந்த சம்பவமும் நடைபெற்றதாக குறிப்பிடவில்லை. அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தன் வீட்டில் வந்து எதிரிகள் இருவரும் அசிங்கமாகப் பேசியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் லதா வீட்டிற்குள் நடந்ததாகவே குறிக்கப்பட்டுள்ளது. அதேபோல் அ.சா.ஆ.2 பார்வை மகஜரிலும் சம்பவ இடம் வாதியின் வீட்டின் உள்ளே அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அ.சா.1 ன் சாட்சியத்தை கவனத்தில் கொள்கையில் சம்பவம் பொது இடத்திலோ அல்லது பொது இடத்திற்கு அருகிலோ நடைபெறாத நிலையில் இதச பிரிவு 294(b)-ன் கீழான குற்றச்சாட்டு இவ்வழக்கிற்கு பொருந்தாது என்று தீர்வு காணப்படுகிறது.

(8.3) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவு 4 TNPHW Act-ன் கீழான குற்றச்சாட்டைப் பொருத்தவரையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Anbazhagan vs State, 2012 MLJ Crl(2)29 என்ற முன்தீர்ப்பில் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றிருக்க வேண்டும் என்றும் மேற்படி பிரிவு 4 TNPHW Act ல் குறிப்பிடப்பட்டிருக்கும் 'any other place' என்பது 'ejusdem generis' விதியின் படி பொது இடத்தையே குறிக்கும் என்றும் தனிப்பட்ட குடியிருக்கும் வீட்டைக் குறிக்காது என்றும் தீர்வு கண்டுள்ளது. முந்தைய பத்தியில் சம்பவமானது அ.சா.1ன்

வீட்டில் நடைபெற்றுள்ளதாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் பிரிவு 4 TNPHW Act இவ்வழக்கிற்கு பொருந்தாது.

(8.4) இதச பிரிவு 452-ன் கீழான குற்றச்சாட்டைப் பொருத்தவரையில் அ.சா.1 அவருடைய சாட்சியத்தில் எந்த இடத்திலும் எதிரிகள் தன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே இதச பிரிவு 452-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வு காணப்படுகிறது.

(8.5) இதச பிரிவு 506(2)-ன் கீழான குற்றச்சாட்டைப் பொருத்தவரையில் அ.சா.1 அவருடைய சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் தன்னை பார்த்து என்னைக்கு இருந்தாலும் உன்னை அடித்து கொல்வதுதான் என்று மிரட்டி விட்டு சென்றதாக குறிப்பிட்டுள்ளது பிரச்சனைக்கு இடையே வெறும் வாய் வார்த்தையாக சொல்லப்பட்டதாகவே தெரிகிறது. உண்மையில் அ.சா.1 ஐ மிரட்டவோ அச்சத்திற்கு உட்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் சொல்லப்பட்டதாக தெரியவில்லை. அதேபோல் அ.சா.1 ம் எதிரிகளின் மிரட்டலோ அச்சுறுத்தலோ தனக்கு உயிர்பயத்தை ஏற்படுத்தியதாக சாட்சியம் அளிக்கவில்லை. இது தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Noble Mohandass V. State, 1988 MWN Cri (2) 184 என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்வு கண்டுள்ளது.

“Further for being an offence under Section 506(2) which is rather an important offence punishable with imprisonment which may extend to seven years, the threat

should be a real one and not just a mere word when the person uttering it does exactly mean what he says and also when the person at whom threat is launched does not feel threatened actually. In fact P.W. 1 when she filed the complaint to the police officer, did not express any fear for her life nor asked for any protection. Therefore, the offence under S. 506(2) is not made out."

மேற்படி முன்தீர்ப்பை கருத்தில் கொள்கையில், இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

(8.6) அ.சா.1 க்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் ஏற்கனவே பிரச்சனை உள்ளதையும் இரு தரப்பினரும் 10 வருடங்களாக பேசிக்கொள்ள மாட்டோம் என்பதையும் அ.சா.1 ன்றே அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் பத்தி 1-ல் ஒப்புக்கொண்டு உள்ளார். அ.சா.ஆ.1 புகாரில் 1 வது எதிரி முத்து மாணிக்கம் இரண்டு கால்களிலும் கம்பால் அடித்து காயப்படுத்தியதாகவும் இருவரும் தனது தலைமுடியையும் கையையும் பிடித்து இழுத்து காலால் தனது தொடையில் மிதித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் 1 வது எதிரி முத்து மாணிக்கம் கம்பால் தன்னை தலையில் அடித்ததாகவும் எதிரிகள் இருவரும் இரண்டு கால்களிலும் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.ஆ.1 புகாரில் வேலாயுதம் கம்பால் தலையில் அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அ.சா.1

அவருடைய முதல் விசாரணை சாட்சியத்திலோ 1வது எதிரி கம்பால் தலையில் அடித்ததாக மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பத்தி 4-ல் புகாரை போலிசார் மருத்துவமனையில் வைத்து எழுதியதாகவும் புகாரில் என்ன எழுதி இருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளது கவனிக்கத்தக்கது ஆகும். ஆனால் விசாரணை அதிகாரியான அ.சா.7 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பத்தி 1-ல் புகாரை அ.சா.1 எழுதியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

(8.7) அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் உள்ள நிலையில் அ.சா.1 ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக வேறு சாட்சியங்கள் அமையவேண்டியது அவசியமாக உள்ளது. ஆனால் அ.சா.2 டோ அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் அ.சா.1 ஐ கம்பால் அடித்ததாக சந்தேகத்தின் பெயரில் சொன்னதாகவும் தான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.2 சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெளிவாகிறது. அ.சா.4 கும் தனக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்புக்கு விரோதமாக பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் பிரச்சனையின்போது குமாரசாமி மற்றும் நாகு ஆகியோர் வந்து கேட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி நாகு இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. மேலும் அ.சா.ஆ.1 புகாரில் எதிரிகள் முத்துமாணிக்கம்

மற்றும் ராமு (எ) வேலாயுதம் ஆகியோர் சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அ.சா.1 அ.சா.ஆ.3 விபத்துப்பதிவேட்டின் படி மருத்துவமனையில் தன்னை 2 ஆண்களும், 3 பெண்களுமாக மொத்தம் 5 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார். எனவே மேற்கண்ட விவாதங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்தில்கொள்கையில் அ.சா.1 ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக வேறு சாட்சியங்கள் அமையவில்லை என்பது தெளிவாகிறது. எனவே மேற்கண்ட சாட்சியங்களில் உள்ள முரண்பாடுகளையும் விவாதங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்கையில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் சந்தேகத்தின் பலனைப் பெற எதிரி தகுதியானவர் என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9) முடிவாக, 1 வது எதிரி இதச பிரிவுகள் 294(b), 452, 323, 506(2) & S.4 of TNPHW Act-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து 1 வது எதிரியை மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று

2026-ம் ஆண்டு மே திங்கள் 08-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.05.08 17:28:20 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | லதாராணி | அ.சா.1 | புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்டவர் |
| 2. | குமாராசாமி | அ.சா.2 | கண்ணுற்ற சாட்சி |
| 3. | வேலு | அ.சா.3 | பார்வை மகஜர் சாட்சி |
| 4. | மாரி | அ.சா.4 | சம்பவம் பற்றிய சாட்சியாக பட்டியலிடப்பட்டு பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். |
| 5. | சபரிநாதன் | அ.சா.5 | பார்வை மகஜர் சாட்சி |
| 6. | முகமது ஹாரிஸ் | அ.சா.6 | உதவி மருத்துவர் |
| 7. | செய்யது அலி(சார்பு ஆய்வாளர்) | அ.சா.7 | விசாரணை அதிகாரி |

## Judicial Form No. 68

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No of the exhibit | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 26/07/2016 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜர் | 26/07/2016 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | காயச்சான்று | 28/11/2019 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | முதல் தகவல் அறிக்கை | 23/08/2022 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 23/08/2022 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சி,சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.05.08 17:28:31 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**பின்குறிப்பு:-**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.